245

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ந.] 1915-ம் ஆ நவம்பர் மீ [இதழ் கக.

இலௌகிகப் பகுதி.

விஷயக் கோத்து.

பாம்பு.

பாம்புக்குக் கண் இமை (ரெப்பை) யில்லாததனால் அது கண்ணை மூடுவதில்லை. கண்ணாடிபோன்ற ஓர் செதிள் அதன் கண் மணியை மூடிக்கொண்டிருக்கிறது. பாம்பு தோலுரிக்கும்போது இந்தச் செதிளும் நழுவிவிடும். இது பார்வையை மறைக்காமல் கண்ணாடிபோல் இருந்துகொண்டு பாம்பு ஓடும்போது புல்மரக்கிளை முதலியன கண்ணைக் குத்தாதபடி காக்கும்.

* * *

தாய்ப் பாஷை.

தமிழ் முதலிய தாய்ப் பாஷைகளை ஜனங்கள் படித்துத் தேர்ச்சியடைவதில் கவர்ன்மெண்டாருக்கு அதிக ஊக்கமில்லையாயினும் நமது ஜனங்களுக்குள் அது விஷயத்தில் கொஞ்சகாலமாய் ஒரு உற்சாகம் உண்டாயிருக்கின்றது. இங்கிலீஷ் பிராஞ்சு முதலிய ஐரோப்பிய

246

பாஷைகளைப் படிப்பதால் நம்மவர்க்கு உண்டாகும் நன்மைகளை நாம் மறுப்பதில்லை. ஆயினும் இந்தியர்கள் யாவரும் ஐரோப்பிய பாஷை யொன்றைத் தாய்ப் பாஷையாய்ப் பேசுங்காலம் வரும் என்று நினைப்பீது மனப்பால் குடிப்பதாகும். ஆகையால் நமது சிறுவர்கள் ஐரோப்பிய பாஷையோடு தமிழ் முதலிய தாய்ப் பாஷைகளையும் செவ்வனே படித்துத் தேர்ச்சியடையவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் கற்ற விஷயங்களைத் தம் பாஷையில் சொல்லியோ எழுதியோ மேனுட்டார் கிரந்தங்கள் சாஸ்திரங்கள் முதலியவற்றின் சாராம்சங்களை நமது ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் கடமையைச் செலுத்தக்கூடும். இவ்வாறு செய்யாது தாய்ப் பாஷையை அலட்சியம் செய்து இதர பாஷைகளைக் கற்றல், தன்னைப் பெற்ற தாய் பசியால் வருந்த ஏனையோர்க்கு அன்னதானம் செய்தலை ஒக்குமன்றோ!

*
* *

ஓர் புதிய பரீக்ஷை.

பிராஞ்சிந்தியாவிலுள்ள ஆரம்ப பாடசாலைகளில் பயிலும் சிறுவர்க்கு, தாய்ப் பாஷை கணக்கு முதலிய முக்கிய விஷயங்களில் உள்ள தேர்ச்சியைப் பரிசோதித்து நற்சாக்ஷிப் பத்திரம் கொடுப்பதற்காக, கவர்ன்மெண்டார் ஓர் புதிய பரீக்ஷையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இது 1916-ம் ௵ எப்ரல் மாதத்தில் முதல் முதல் நடைபெறும்.

*
* *

இந்தியாவின் நிலைமை.

நாளது மாதம் 10-ம் ௳ பாளையங்கோட்டையில் G. S. எடி என்பவர் செய்த உபந்நியாசத்தில், அவரவர் தேசத்திலுள்ள மொத்த தனத்தைப் பங்கிட்டுப்பார்த்தால் ஒரு இந்தியனுக்கு 300 ரூபாயும், ஜப்பானியனுக்கு 700 ரூபாயும், ஆங்கிலேயனுக்கு 6000 ரூபாயும் வருகிறதென்றும், இந்தியர்கள் தினமொன்றிற்குப் பேருக்குச் சராசரி ஒன்றரை அணுத்தான் சம்பாதிக்கிறார்கள் என்றும், காரணம் இந்தியாவில் 100-க்கு 10 பிள்ளைகளும் ஒரு பெண்ணும், ஜப்பானில் 100-க்கு 97 பிள்ளைகளும் 93 பெண்களும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருப்பதுதான் என்றும், மேலும் பால்ய விவாகம் முதலிய அநேக துராசாரங்களை மாற்றிச் சீர்திருத்தம் செய்தாலொழிய இந்தியா முன்னுக்கு வர இடமில்லையென்றும் சொன்னார். நமது நிலைமையைப் பார்த்து அன்னிய நாட்டாரும் பரிதபிக்கும் இக்காலத்தில், கல்வியும் செல்வமும் ஒருங்கே பெற்

றுள்ள நமது பிரபுக்கள் என்ன செய்கின்றார்கள்? தமது பொருளையும் புத்தியையும் இத்தேச சேவையிலன்றோ செலவழிக்கவேண்டும்!

*
* *

ஜர்மனியின் ஜனத் தொகை.

1913-ம் வருஷத்தில் ஜர்மனியின் ஜனத் தொகை சுமார் 6 கோடியே 70 லட்சம் என்று கணக்கிடப்பட்டது, இதில் ஆண்களைவிடப் பெண்கள் 30 லட்சம் அதிகம். இப்படியிருக்க, இப்பொழுது நடக்கும் சண்டையில் அநேக லட்சம் புருஷர்கள் மாண்டுபோனபடியால் ஜனத் தொகையை அதிகமாக்கும் வழியைப்பற்றிக் கவர்ன்மெண்டார் இப்பொழுதே ஆலோசனைசெய்து வருகிறார்கள். ஜர்மன் பிரபுக்களும் பெரிய சாஸ்திரிகளும் இராஜாங்கப் பிரதிநிதிகளும் சமீபத்தில் கூடிய ஒரு சங்கத்தில், இது விஷயத்தில் பின் சொல்லப்படும் வழிகளை அநுசரிக்கலாமென்று தீர்மானித்தார்கள்:—

1. கலியாணத்திற்கு ஏற்பட்டிருக்கும் வயது நிர்ணயத்தை நீக்கிவிடுதல்.

2. கலியாணத்திற்குக் கச்சேரிகளால் ஏற்படக்கூடிய இடையூறுகளை நீக்குதல்.

3. கலியாணம் செய்துகொள்ளும் நிலைமையில் இல்லாதவர்களுக்குப் பொருளுதவி செய்தல்.

4. பெருங் குடும்பிகட்குப் பொருளுதவி செய்தல்.

5. கலியாணம் செய்துகொள்ளாத புருஷர்கள், ஸ்திரீகள், சந்ததியற்ற தம்பதிகள், ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் போதுமென்று இருப்பவர்கள் இவர்கட்குக் கடுமையான வரிபோடுதல்.

6. பள்ளிக்கூடங்கள், கோயில்கள், நாடகசாலைகள் முதலியவைகளின் மூலமாக அதிக குழந்தைகளை உற்பத்திசெய்வது தேசாபிமானமுள்ள ஒவ்வொரு ஜர்மானியனின் கடமையென்று எடுத்துக்காட்டல் முதலியன.

இதையெல்லாம் பார்த்தால் ஜர்மனியில் இனி ஏக பத்னி விவாகம் நின்றுபோய், துருக்கர் வழக்கம் பரவக்கூடுமெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். என்ன நடக்குமென்பதை யார் கண்டார்!

மணிதாசன்.

கலைமகள் பத்திரிகை.

இப் பெயர்பூண்ட அரிய பெரிய பத்திரிகையானது புதுவையில் நடைபெறுவதோர் மாதாந்தப் பத்திரிகையாகின்றது; இதனை நடாத்துவோர் புதுவையில் கல்வே காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் சி. பங்காரு பத்தரவர்கள் என்னும் பெயருடையாராவர். தமிழ்ப் புலவர்களிடத்திலும் தமிழபிமானிகளிடத்திலும் அன்பு பாராட்டும் பெருந்தகையராவர்; தமிழ் மொழியின் ஆக்கப்பாட்டிற்குப் பெரிதும் மகிழ்பவராவர். அத் தகையார் தமது கலைமகள் பத்திரிகைகளில் ஆறு பத்திரிகைவரையில் தமியேனுக்கு அன்புகூர்ந்து வரவிடுத்தனர்; அவற்றையெல்லாம் தமியேன் பார்வையிட்டனன்; உரியாரும் பார்வையிட்டனர். அப் பத்திரிகையின்கண்ணுள்ள பாகுபாடுகளும் அப் பாகுபாட்டின்கண்ணுள்ள செந்தமிழ் நடையும் அந் நடையுட்பொதிந்த அரும் பொருள்களும் பிறவும் தமியேனை மகிழ்வித்தன, உரியாரையும் மகிழ்வித்தன.

நூல்களால் எடுத்துக்கூறும் தருமசின்னங்கள் நான்கனுள் மகிழ்ச்சியும் ஒன்றன்றோ? அவற்றுள் சிறந்ததும் இதுவேயாம். உயிர்கள் தாழ்ந்தநிலையிலும் உயர்ந்தநிலையிலும் அடையவேண்டியபயன் இம் மகிழ்வினும் வேறொன்றில்லை. இவ்வளவு சிறந்தபயனைக் கலைமகளென்னும் பத்திரிகை ஒருங்கு தருமாயின் அதனது மேம்பாட்டினை எடுத்துக் கூற வல்லார் எவருளர்? இப் பத்திரிகைக்குக் கலைமகள் என்னும் அரும் பெரும் பெயரே தகுதிப்பாடுடையது. இப் பத்திரிகை பெற்றுவரும் கௌரவச் சந்தாதாரர்கள் அனைவரும் இம் மகிழ்வென்னும் பயனை அடைவார்களென்று நம்புகிறேன். ஆண்மக்களிற் பெரியராயினாரும் பெண் மக்களிற் பெரியாராயினாரும் இப் பத்திரிகைக்கு விஷயதானம் செய்து கொண்டு வருகின்றனர். அவ் விஷயங்கள் கலைமகட்கு மங்கலநாண் போலவும், திலகம்போலவும், மலர்போலவும் அழகு செய்கின்றன. இக் கலைமகளைப் புரந்தருளவந்த நிர்வாகசபையார் முதலோரும் ஒவ்வோர் வகையில் கௌரவம் பெற்றவர்களாக இருக்கின்றபடியால் அவர்கள் அக் கலைமகளுக்குக் கண்போலாகின்றனர்.

ஆயின், இக் கலைமகளைப் பெற்றுவரும் கௌரவ சந்தாதாரர்கள் எல்லோரும் தம் தம் சந்தாத் தொகையைத் தமிழின்கண் பெரிதும் அபிமானம்வைத்து ஆண்டுதோறும் செலுத்திக்கொண்டேவந்தால்தான் கலைமகள் பத்திராசிரியருடைய தமிழபிமானமும், கலைமகளழகும் நிர்வாக

சபையார் முதலியோருடைய கௌரவமும் பிறநலங்களும் மேன்மேலும் வளர்ச்சிபெற்றுக்கொண்டேவரும். தமிழானது நூல்களால் குன்றி வரும் இக்காலத்தில் இவ் வளர்ச்சி இன்றியமையாததாகின்றது.

ஒரு கலைமகள் பதினாயிரம் கலைமகளாகுக. மற்றும் அப்படி வேண்டும். "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்." திருவருளும் உடனிற்க.

மாகறல், கார்த்திகேய முதலியார்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ௨, இதழ் ௬, 199-ம் பக்கத் தொடர்ச்சி.)

"பாடத் தெரியுமல்லவா உங்களுக்கு?" என்று அடுத்த பேச்சு சாவித்திரியின் அதரங்களில் புன்னகை அலரப் புறப்பட்டது. பதினாயிரம் பெண்கள் சூழ்ந்து கைகொட்டி என்னைப் பரிகசித்தாலும் நான் சகித்துக்கொள்வேன். இந்த ஒரு பெண்ணின் இந்த ஒரே வினாவினால் என் மனம் என்ன பாடுபட்டதம்மா! என்ன பாடுபட்டும் என்செய்வது. கேட்ட கேள்விக்கு உத்தரங் கூறியாகவேண்டுமே. 'தெரியாது' என்ற வெட்கங்கெட்ட பதத்தை மெல்லச் சொல்லிவிட்டேன். "ஏன்! உங்கள் காந்திமதி பாடுவாளே" என்றாள். "ஆமாம் காந்திமதி பாடுவாள்" என்று நான் சொல்வதின்னதென்று மறியாமல் கிளிப்பிள்ளையைப்போல் கூறினேன். "ஆமாம் காந்திமதி மிக அழகாய்ப் பாடுவாள். அவள் வீணை வாசிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். நான் கற்றுக்கொடுக்கிறேன். நீங்கள்கூடக் கற்றுக்கொள்ளலாம். ஒன்றுந் தெரியாத எனக்கே சுலபமாயிருந்தது. நன்றாய்ப் படித்த நீங்கள் வெகு சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்" என்று வார்த்தைகளைத் துரிதமாக அடுக்கினாள் முன்பு நாண மௌனஞ் சாதித்திருந்த சித்திரப்பேதை. சங்கீத சாகித்தியங்களை எப்பொழுதும் பழித்துச் சிரித்துக்கொண்டிருந்த எனக்குப் புதிதாக அவற்றில் மதிப்பும் ஆர்வமுமுண்டாயின. என்? அதுதான் எனக்குத்

தெரியாது. அது, மனம் என்ற சூக்ஷ்ம வஸ்துவில் நிகழும் விசித்திரங்களில் ஒன்று என்றுதான் சொல்லலாம்.

சங்கீதப் பேச்சு வளர்ந்தது. கடைசியாக, காந்திமதியும் நானும் வீணை வாசிக்கக் கற்பதாகத் தீர்மானமாயிற்று. மற்றும் பல விஷயங்களைப்பற்றி யுரையாடினோம். அன்றிரவு நான் அவ் வகத்திலேயே தங்கிவிடும்படி மன்றாடினார்கள் மூவரும். எங்கள் வீட்டுக்கு மீண்டும் போய் இவ் விஷயத்தை என் பெற்றோர்களுக்கு அறிவித்து வருவதாகவும் சொன்னார் சாவித்திரியின் தந்தை. ஆயினும் நான் இணங்கவேயில்லை. அவர்கள் அதிக வருத்தமுற்றார்கள். ஆனால் என் ஆண்டாளம்மாளுக்கு நான் இன்னும் செல்வக் குழந்தையாயிருக்கும் உண்மைத் தன்மையை அவர்கள் அறிந்திருந்தால் அவ்வளவு வருத்தமடைந்திரார்கள். பின்னர் நான் ஒன்று வேண்டினேன். சாவித்திரியை, என் அம்மாள் பார்த்து அவள் வீணைவாசிப்பதையும் கேட்கவேண்டுமென்றும், அவள் தன் வீணை சகிதம் எங்கள் வீட்டிற்கு வந்து அன்றிரவு தங்க வேண்டுமென்றும் கோரினேன். இதற்கு அவள் பெற்றோர்கள் முதலில் சற்று மனமில்லாதவர்களா யிருந்தார்கள். ஆனால் சாவித்திரி பூரண விருப்பங்கொண்டிருந்தாள். ஆகையால் அவர்களும் சம்மதித்துவிட்டார்கள். சற்றுநேரத்தில் சாவித்திரி, அவள் வீணை, அவள் தந்தை, நான் ஆகிய நால்வரும் வண்டியிலேறி எங்கள் வீட்டுக்கு வந்தோம். என் தந்தையும் சாவித்திரியின் தந்தையும் மித்திராராயினர். புதிய நட்பேயாயினும் இருவர் அகத்திலும் விட்ட குறையைத் தொட்டதுபோன்ற பற்றுதித்துவிட்டது. "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்" என்ற மெய்ம்மறைப் பொருள் பிரத்தியட்சமாகத் துலங்கலாயிற்று. சுமார் ஒன்பது மணி வரையில் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். பின்பு சாவித்திரியின் தந்தை மாத்திரம் அகன்று போயினார். போஜனத்திற்குப் பிறகு அர்த்தராத்திரிவரையில் என் அம்மாள், சாவித்திரி, வீணை, காந்திமதி, நான் ஆகிய ஐவரும் குலாவினோம். சாவித்திரி பல பாட்டுகள் பாடினாள். காந்திமதியும் பாடினாள். என்னென்னவோ விஷயங்களைப்பற்றிப் பேசினோம். அவைகளையெல்லாம் இங்கே விவரிப்பானேன்.

அன்று முதல் எங்கள் குடும்பத்திற்கும் சாவித்திரியின் குடும்பத்திற்கும் அத்தியந்த நட்பு முதிர்ந்து வளர்ந்தது. யாதாமொரு அத்தியாவசியகமான காரியத்திற்கன்றி அயலகத்துக்குக்கூடப் போகாத என் அம்மாள் வாரத்திற்கு மூன்று நான்கு முறை சாவித்திரியின் வீட்டுக்குப் போய் வரலாயினள் என்றால், குழந்தைகளாகிய நாங்கள் மூவரும் எவ்

வளவு அடிக்கடி சந்தித்திருப்போம். சாவித்திரியின் வீணையும் அவள் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் ஊசலாடிற்று. என் தங்கைக்கும் என்க்கும் வீணை வாசிக்கும் ஞானம் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகிற்று. நான் ஒரு புதிய ஜனகனுக மாறிவிட்டேன். சங்கீதத்திலே எனக்குப் பெரும் பைத்தியமுண்டாயிற்று. குழந்தைப் பருவத்திலேயே எனக்குச் சங்கீதத்தில் விசேஷ பிரியமுண்டு. என் மூன்ரும் வயதில் என் அம்மாள் கற்றுக்கொடுத்த பாட்டுகளையெல்லாம் உடனுக்குடனே கற்றுக்கொண்டு, தலையை யசைத்தசைத்து நான் பாடியதும் பாட்டுக்குத் தக்கவாறு நான் ஆடியதும் இன்னும் எனக்கு நன்ருய் ஞாபகத்திலிருக்கின்றன. ஆனுல் நான் பாடசாலைக்குப் போன சில வருஷங்களுக்குப் பின், சங்கீதம், பஜனை, பாட்டு இவைகளில் ஏன் உபேட்சையும், அவமதிப்பும் கொண்டேன் என்பது மாத்திரம் சரியாகத் தெரியவில்லை. அது என் ஜாதகப் பலன் என்றுதான் சொல்லவேண்டும்.

சங்கீதப் பிரேமை யுற்றதால் மாத்திரம் நான் புதிய ஜனகனுக மாறிவிட்டதாகச் சொல்லவில்லை. அது என் குழந்தைப் பருவத்திலிருந்த பிரீதிதானே. மற்றுஞ் சில விஷயங்களினுல்தான் நான் புதியவனுயினேன். சாவித்திரியின் உருவம், அவள் வீணை, பாட்டு, பேச்சு, இவைகள் நீங்காது என் சித்தத்தில் உலாவிக்கொண்டே யிருந்தன. அவ்வாறிருந்தமை, நான் முன்பு என்றும் உணர்ந்திராத ஓர் இன்பத்தை இறைத்துக்கொண்டே யிருந்தது அந்தச் சித்தத்தில். பந்து விளையாட்டு, தோழரோடு சேர்ந்து சங்கீதத்தையும் சகல மதங்களையும் பரிகசித்துப் பேசுதல் முதலிய காலக்ஷேபங்களிலெல்லாம் பற்று திடீரென இற்று வீழ்ந்தது. படிப்பிற்கூடப் பற்றுக் குறைந்துகொண்டே வந்தது. சாவித்திரியோடு பேசிக்கொண்டிருப்பது, சாவித்திரியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது, சாவித்திரியும் அவளோடு பேசிய அவளைச்சார்ந்த கணக்கற்ற விஷயங்களும் அடிக்கடிக்காகச் சிந்தையிற் சுழல விழித்துக்கொண்டு கனவு கண்டுகொண்டிருப்பது இம் மூன்றையுந்தான் சதா நாடினேன். கனவற்ற நித்திராகாலந் தவிர, அநேகமாக எப்பொழுதும் இம் மூன்று நிலைமையி லொன்றிலேயே இருந்தேன்.

சத்தியம், பொறுமை, ஜீவகாருண்யம் முதலிய நற்குண நல்லொழுக்கங்களில் எனக்கு மதிப்பும் பற்று மிருந்ததேயன்றி, மதம், தெய்வம், பக்தி முதலிய விஷயங்களில் எனக்கு நம்பிக்கையே கிடையாது; அவைகளைக் கடைப்பிடித்தவர்களிடம் நான் பரிதாபங் கொண்டேன்; எத்தனை புத்தகங்களை வாசித்தும், பலபண்டிதர்களிடம் பேசியும் எனக்கு

அந்த நம்பிக்கையும் பிறக்கவில்லை, அந்தப் பரிதாபமும் என்னை அகல வில்லை என்று முன்னமே விளக்கிக் கூறியிருக்கிறேன். ஆனால் சாவித் திரியைச் சரஸ்வதி பூஜைக் கோலத்தில் நான் முதன் முதல் பார்த்த பொழுது மாத்திரம் நான் பிரமையுற்றவனாய் மனப்பூர்வகமான விநயத் துடன் சரஸ்வதி படத்தின் முன்பு கை கூப்பிக்கொண்டிருந்தேனென் றும் முன்பு சொல்லியிருக்கிறேன். எனினும் இரண்டொரு தினங் களில் அந்தப் புதிய பிரமையும் விநயமும் பறந்துவிட்டன. பக்தியென் றும் பஜனையென்றும் பூஜையென்றுங் கொண்டு திரிவார்பா லுண்டா கும் பழைய பரிதாபமே சாவித்திரியின்பாலும் சார்ந்தெழுந்தது. தங்கப் பதுமைபோல் காந்தியும், தாமரைமலரினும் முக வசீகரமும் வாய்ந்து விளங்கும் அவ்வளவு அசாதாரண அழகுடைய அந்தப் பெண், பாலொடு தேன் கலந்தவாறு, வீணையின் இசையோடு சரியாய் இயைந்தொலிக்கும் அவ்வளவு இனிமையான குரலுடைய அந்தப் பெண், கோபமென்ப தையே உணர்ந்திராத அந்தப் பெண், தகதகவென் றுளிரும் ஒளிப் பிழம்பன்ன பரிசுத்தம் படிந்துள்ள அந்தப் பெண், அறிவை விசாலிக்கச் செய்யும் போதிய கல்வியில்லாமையினாலல்லவா ஐயோ! இல்லாத விஷ யங்களை இருக்கின்றனவாகக் கருதிப் பல குருட்டுக் கொள்கைகளைக் கொண்டு அவஸ்தைப்படுகின்றாள் என்று எண்ணி எண்ணி வருந்தி னேன். இவ்வாறு எண்ணி ஏங்கி வருந்துவதாற் பயனென்ன, அவள் அறிவுக் கண்ணைச் செவ்வனே திறக்குஞ் சக்திவாய்ந்த சிறந்த கல்வியை அவள் பெறச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தேன். நான் பெற்ற படிப்பை அவளுக்குப் புகட்டத் தொடங்கினேன். அன்றியும் அவளது சரஸ்வதிபடம் பூஜை முதலியவைகளின் வெறுமையையும், பயனிலாமை யையும் ஸ்பஷ்டமாக அவளுக்குப் பேசிக் காட்டவேண்டுமென் றெண்ணி யிருந்தேன். அதற்குத் தக்கவாறு ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தது. அவள் குருட்டு நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் அத் தருண முதல் கலைக் கக் கருதி முயற்சித்தேன். ஆனால் அம்மவோ! சர்வ சக்தி சார்ந்த சரஸ் வதி தாய் என்பாற் கொண்ட கருணையே கருணை! என் முயற்சி நான் முற்றும் எதிர்பாராத காரியங்களை நிகழ்த்திவிட்டது. என்ன காரியங் கள்? நான் சாவித்திரியின் நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் சிதைக்க வெண்ணிய கருத்துப் பலிதமாகாமற்போயினதும் அக்கருத்தே என்னிட மிருந்து சிதைவுற்று, புத்தகங்களாலும் பண்டிதர்களாலும் சற்றேனும் அசைக்கவியலாத எனது நாஸ்திகக் கொள்கைகளனைத்தும் என் சித்தத்தி லிருந்து பெயர்த்தொழிக்கப் பெற்று நான் முற்றும் புதிய ஜனகனாக மாறி யதுமே. நான் இவ்வாறு முற்றும் புதிய ஜனகனாயின விசித்திரத்தை

விளக்குவதுதான் எனது சரித்திரத்தை நான் வரைவதின் முக்கிய கருத்துக்களில் முதன்மையானது. * இவ்வொரு பீடிகையோடு அந்த விசித்திரத்தை ஆதியோடந்தமாக விவரிக்கத் தொடங்குகின்றேன்.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப் பிள்ளை.

யாசகம்.

யாசகம், ஏற்பது, இரப்பது என்பவை ஒரு பொருளன. யாசகமாவது — வேலைசெய்து ஜீவிக்கச் சக்தியற்றவர்கள் பிறரிடம் சென்று, "ஏதேனும் ஈவாய்" எனக் கேட்டு வாங்குவது. வேலைசெய்யச் சக்தியற்றவர்கள்— கூனர், குருடர், செவிடர், நொண்டிகள், முடவர், நோயினர், வயோதிகர், பாலர் முதலியவர்களாம். இவர்களே யாசகம் செய்தற்குரியவர்கள். இன்னோருக்கு ஈபவரே ஈகையின் பயனை யெய்துவார். இங்ஙன மின்றிச் சிலர் திடகாத்திரமுள்ளவரா யிருந்தும் யாசிக்கின்றனர். சிலர் தொழில் செய்வதிற் சோம்பேறிகளாய் இருந்து இரக்கின்றனர். இன்னுஞ் சிலர் பணஞ் சேர்த்துவைக்கவேண்டுமென்றே ஏற்கின்றனர். வேறு சிலர் தங்கள் விஷயத்திற்கென்றால் ஒரு தம்படியுங் கிடைக்காதென்று யோசித்து, சத்திரங் கட்டப்போகிறேன், நந்தவனம் வைக்கப்போகிறேன், பசுமடம் கட்டப்போகிறேன், அன்னமிடப்போகிறேன், காசிக்குப் போகப்போகிறேன், கல்விச்சாலை கட்டப்போகிறேன் என இன்னும் பலவாறு பத்திரிகை போட்டுக்கொண்டு தண்டல்செய்து அப் பொருளால் தாங்கள் சொன்ன காரியத்தைச் செய்யாமல், வேறு துர்விஷயத்திற் செலவிடுகின்றனர். இவர்களுக்கெல்லாம் கொடுப்பவர்களுக்குப் பாவமே வருமன்றிப் புகழும் புண்ணியமும் உண்டாகுமா?

---

* இம் முதன்மையான நோக்கத்தோடு, கதாநாயகன் தான் முற்றும் புதிய ஜனக ராஜனாய் மாறிய விதத்தை மிகச் சவிஸ்தாரமாய் பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறான். ஆனால், இச் சரித்திரத்தைப் பிரசுரிக்கத் தொடங்கியது முதல், இதில் விஷய புஷ்டியே இல்லையென்றும், வீணாக என்னென்னவோ சொல்லிக் கதை வளர்த்தப்பட்டிருக்கிறதென்றும் சில நேயர்கள் சலிப்படைவார்கள். ஆகையால் கதாநாயகன் பக்கம் பக்கமாக வரைந்திருக்கும் இந் நீண்ட விஷயத்தை இயன்றவரை சில வரிகளில் மிகச் சுருக்கித் தருகின்றோம். (ஆசிரியன்.)

மேற்கூறப்பட்ட இவ் யாசகர்கள் "எற்பதிகழ்ச்சி" "இரத்தலின்னூங் கிளிவரவில்லை" "நல்லாறெனினுங் கொளறீது" என்ற பழமொழிகளைப் பார்த்திலர்போலும்! தீவினைப் பயனால் வறுமைவந்த விடத்து, கழுநீரிலே வேகவைத்த இலைக்கறியேனும், உப்பில்லாப் புற்கையாயினும், அதுவும் அரைவயிற்றுக்கும் எட்டாததாயினும், தன் முயற்சியாற் றொழில்செய்து பெற்றுண்பதே அமுதமாந் தகுதியுடையதன்றிப் பொரியல், துவையல், பச்சடி, நெய், பால், தயிர், வடை, பாயசம், முப்பழம் முதலியவற்றோடு கிடைத்த சித்திரான்னங்களும் யாசகத்தால் பெற்றுண்பது விஷமாயிருப்பதோடு இழிவினும் இழிவென்பதை எள்ளளவும் உணர்ந்தாரில்லை. "போனகமென்பது தானுழந் துண்டல்" அன்றோ? ஒருவரிடம் சென்று அவர் காறியுமிழ்ந்த தம்பலத்தை மிதிப்பதுந் தனக்குத் தோன்றாமல், அவரையே தோத்திரஞ்செய்து சமயம் பார்த்து ஒதுங்கி நின்று யாசித்தல்,

"பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவான் முகத்துக் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி
யில்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும்."

என்று கூறியபடியே மிகவும் இழிவென்று விளங்கவில்லையா? மனிதர்கட்கு மானமே அரிய ஆபரணமாயிருக்க, அதனைப் போக்கி இரத்தல் என்ன பயன் கருதியோ? இன்னகாலத்திலே நீங்குமென்று அறியப்படாத அநித்தியமான இவ் வுடலைக் காத்தற்கு, நீடித்திருப்பதாகிய அவமான முண்டுபண்ணும் யாசகத்தை மேற்கொள்ளுதல் மேன்மையாகுமா? "மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்றார் பெரியோர். எற்றோர்க்கு மாற்றாதுதவும் இனியவரிடத்தும் இரவாது வாழ்வதே சிறந்த வாழ்க்கையென்று செப்பியுள்ளார் சிறந்தோர். புறத்தே தரித்திரம் சரீரத்தைப் பசி முதலியவற்றால் வருத்த, உள்ளத்தே மெய் யறிவை நீக்கி வைத்து, ஒருவனிடம் சென்று, "பிரபு! எனக் கேதேனும் ஈவாயாக" என்று வேண்டினால், அவன் "இல்லை போ" என்று மாறு கூறின், யாசகன் அவ்விடத்தே அப்போதே இறந்து பட்டாற்போற் றுன்பமெய்துகின்றானன்றோ? ஆ! ஆ! என்னே இவ் விரத்தலின் கொடுமை! இவ் விரத்தலை உண்டாக்கும் வறுமையின் வன்மைதானென்னே! உள்ளபடியே தொழில்செய்து ஜீவிக்கச் சக்தியற்றவர்கள் யாசகஞ்செய்வதில் இப்படிப்பட்ட தாழ்வு இருக்கின்றதென் றறிந்தும், வினைப்பயனால் வேறு வழியின்றி, அவ் யாசகத்தையே மேற்கொண்டு தங்களிடம் மேவி

னல், பிரபுக்களாயிருப்பவர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்களா? இல்லை. வேறு என்னசெய்கின்றாரென்றால், "மேல்வீட்டிற் போய்க் கேள், கீழ்வீட்டிற் போய்க்கேள், போய்வா, இன்னொரு தினம்வா, சாயந் தரம்வா, காலையில்வா, வீட்டில்வேலை, ஒருவரும் இல்லைபோ" என இவ் வாறு சாக்குப்போக்குச் சொல்லிவிடுகின்றனர். சில புண்ணியவான்கள் யாசகரான கூனர், குருடர், செவிடர், நோயினர், விருத்தாப்பியர் முத லியவர்களைப் பார்த்துப் பரிகாசம்செய்தும், சேட்டைகள்செய்தும் வேடிக்கைபார்க்கின்றனர். சிலர் துஷ்டத்தனமாய்த் திட்டியும் அடித்தும் துரத்திவிடுகின்றனர். சிலர் தங்கள் அதிகாரத்தைக் காட்டி அதட்டு கின்றனர். சிலர் இன்னும் பலவாறு ஏழை யாசகர்களை இன்னல் செய் கின்றனர். இவர்கட்கெல்லாம் என்ன கதியோ! தங்களின் மேம்பட்ட ஒரு வன்னெஞ்சன் தங்களை அவ்வாறெல்லாம் இகழ்ச்சிசெய்ய நேரின், உளம் பதைத்து ஒடுங்கி உறுசினங்கொண்டு உணவுங் கொள்ளாமல் உறக்கமுமின்றி யோசனையை நீளவிட்டுப் பெருமூச்சுவிடுகின்ற இவர் கள், தம்மிற்றாழ்ந்தவர்களிடம் ஏனோ இவ்வாறு இயற்றுகின்றனர்? பிர புக்களாகிய தங்கள் கஷ்டநஷ்டங்களையும், சமயத்தையும், அதிகாரத்தை யும், அலைச்சலையும், யாசகர்கள் எவ்வாறு தெரிந்திருப்பார்கள்? "நொந் தவரும் பசித்தவரும் விருந்தினரும் விரகினரும் நோயுள்ளோரும் — தந் தமதுவருத்த மல்லாற் பிறருடைய வருத்தமது சற்று மெண்ணார்" என்ற பெரியோர் வாக்கியத்தின்படி அவரவர் வருத்த மவரவர்க்கன்றோ தெரி யும். இஃதறிந்தவர்கள், "தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்றபடி யாசகர் தொந்தரவுசெய்வதால் அவர்கள்மேல் தங்கள் தன்மையெல்லாங் காட்டாமல், இயன்றதொன்றைக் கொடுத் தனுப்புவதே நலம். இல்லையென் றிரந்த யாசகர் முன், தாங்களும் இல்லை என்ற மொழியை எடுத்துரைப்பது மிகவும் இழிவென்பர் மேலோர். தங்களால் ஏதும் கொடுக்கமுடியாவிடின், கோபமின்றி நியாயமாய்ப் பதில்சொல்லி யாசகர்களை அனுப்பிவிடுக. இவை நீதிநூற் கருத்து. இது நிற்க.

மேற்கூறியவாறு இரத்தலினால் அளவிறந்த துன்ப மிருத்த லினாலன்றோபெரியோர்கள் "இரவினை — உள்ளுங்காலுள்ள முருகுமா லென்கொலோ — கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு." என்றும், "இர வுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள — வுள்ளதூஉ மின்றிக்கெடும்." என் றும் இயம்பினார்கள். பிச்சை எடுத்தலின் பெருமை இவ்வளவாக, இதற்கு மேற்பட்ட வாழ்க்கை ஒன்றுளது. அது யாதெனில், பிறரிடம் இச்சக வார்த்தைகள் பேசி, அவரை நெருக்கித் தாம் வாங்கி உண்பதே. இதனை

வஞ்சகப்பிச்சை என்னலாம். சீ! சீ! மானங்கெட்டு இப்படி வயிறு வளர்த்து வாழ்வதிலும், உயிர்விட்டு மானம்பெறுதல் மகா மேன்மை பெறும் என்பதை நமது ஔவைப்பிராட்டியார்,

“பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை — சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும்.”

என நல்வழியில் நன்ருக விளக்கினுர்.

இனி, வறுமைத் துன்பத்தை முயன்று தொழில்செய்து நீக்கிக் கொள்ளாமல் இரந்துண்டு நீக்க எண்ணி, அந்த இன்மைத்துன்பத்தோடு இரத்தற் றுன்பத்தையும் எய்தித் துன்பத்துட்டுன்பமுற்று, இம்மை மறுமை இன்பங்களையெல்லாம் ஒருங்கே இழந்துவிடுதல் எவ்வளவு பெரிய பேதைமை! இஃதுணர்ந்தோர், இவ்வாறு அச் சோம்பேறி யாசகர்க் குணர்த்தக்கடவர்கள்.

சிலர் தருமநூற் கருத்துப்படி, சில முக்கிய தருமங்கள் தம்மாற் செய்ய முடியாவிடினும், பிறர்பால் யாசித்தேனும் செயல்வேண்டும், அத் தருமம் செய்தோர்க்கும் உதவினோர்க்கும் பலன்றரும் என்று முயல் கின்றனர். “ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற் கிரவி னிளிவந்ததில்” என்ற மூதறிஞர் மொழியால், அவ்வறனும் இரத்தலாகிய இழிவினிழிவு கலத்தலாற் செய்யத்தக்க சிறப்பிலதென்க. ஆயினும் மானம் தீரா இரவினுல், இரக்கப்பட்ட பொருள் துன்பமுறு வகை வந்தால், அப் பொருளைக்கொண்டு தருமம் செய்யலாமென்பது சான்ருேர் கொள்கை யாம்.

“ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர்
ஈயேனென்ற லதனினு மிழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
கொள்ளேனென்ற லதனினு முயர்ந்தன்று.”

என்ற புறநானூற்றுத் திறமார் செய்யுளால், தன் வறுமை கண்டு ஒருவன் தனக்கேதேனும் கொடுக்கவந்தாலும், “எனக்கு வேண்டா, நானிது கொள்ளேன்” என மறுத்தலே மானிகளுக்கு உயர்வென்று உரைக்கப் படுகின்றது. ஆகையால், தொழில் செய்யச் சக்தியுள்ள ஒவ்வொரு மனிதரும், எப்படிப்பட்ட வறுமைத் துன்பங்கள் வந்தாலும், பட்டினி கிடந்தாலும், உயிரே போனுலும், யாசகஞ்செய்தல் சுலபமென்றெண்ணி

அத்தொழிலிற் புகாது, தத்தமக்கு இயன்றதொரு தொழிலியற்றி, அதனாற் கிடைத்த உணவை இனிதினுண்டு மானத்தோடு வாழக்கடவாராக.

வீ. துரைசாமி முதலியார்,
தமிழ்ப் பண்டிதர், பாகூர்.

தமிழின் பெருமை.

(வெண்டாமரை ௩, இதழ் ௧௦, 223-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேலும், முருகவேளி னருள்பெற்று நீதிநூல்கள் சாத்திரங்கள் முதலியன தமிழில் இவ்வுலகிற் குதவிய பெருந்தகையாகிய ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் முதன் முதல் கடவுளைத் துதிசெயத் தொடங்குங்கால், எப்பாடையினால் துதிசெய்வோமென் றாராய்ந்து தமிழ் ஒன்றனையே பற்றுக்கோடாகக் கொண்டருளினார் என்பதை அடியிற் காணப்படும் பெரியார் பாடல்கள் நான்கும் நன்கு புலப்படுத்தும்.

*ஒருகுமர குருபரமா முனிதமையாட் கொண்டருளி னுபதேசித்த
குருபரனைத் துதிசெய்வான் கருதியெது கோடுமெனக் குறிக்க லுற்று
ஈருமையபன் மொழிகளுளுந் தென்கலையும் வடகலையு மநாதி யாய
பொருவிலிரண் டினுக்குமுதலாசிரியன்பிறைமுடித்தபுகழ்ப்புத்தேளால்.

*அனையனிடைக் கேட்டுணர்ந்து விரித்தவிரு வருமுனிவர்க்கரசாவுள்ளார்
நினையுமிவை யொத்தனவே யாயினுமிவ் விரண்டனுளு நிகரி லாத
[வயங்கக் கொண்ட.
வனைபுகழ்த்தென் மொழிமறையிற் சிறப்பெழுத்தைந் தெனவைந்தே
தினையவிசே டமுமன்றி யடிமுடிமா லயனின்னு மெய்தா முன்னேன்.

*பித்தனென விகழ்ந்ததுமெண் ணதுபா டுகவெனவும் பெண்பாற் றூது
சித்தமகிழ்ந் ததுவேட்டுச் செலவுமினுஞ் செயற்கரிய செயவுந் தானே
யொத்தமுதற் புலவனென வுறவுமெழு திடுவோனு வுறவு மோங்கு
வித்தகவண் கயிலையகம் வருவித்துக் கேட்டிடவு மேய தம்மா.

*ஆதலிற்றென் கலையேநாங் கோடுமெனத் துணிந்துபெரு கன்பு போர்ப்ப
மேதகப்பூ மேவுமுத லெடுத்தணிமுற் சிறந்தகவி வெண்பா வொன்று
போதகனு கியபெருமாற் கோதியள வருங்கேள்விப் புலவர் சூழக்
காதலினு யிடையமர்ந்தா ரறங்கடலை யெடுக்கவந்த காட்சி யாரோ.

---

* குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.

இனி விரிக்கிற் பெருகுமென்றெண்ணி இம்மட்டோடு முடித்து விடலாமென்று நினைத்தேன். ஆனால் என் நண்பர் ஒருவர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் கண்ட விடயத்தை, தமிழின் பெருமை கூற வந்த இவ்விடத்துச் சொல்லாமலிருக்க முடியவில்லை. அஃது வருமாறு.

ஆலவாயி னழல்நிறக் கடவுள் தம் முதுகில் பாண்டியன் கைப் பிரம்பா லடியுண்டார். தென்றற் றேரினன் புட்பத்தால் அடிக்கப் பொறாத நம் சுந்தரர், மண்ணகத் தரசனொருவன் கோபங்கொண்டவனாய் முதுகில் அடிக்கப் பொறுத்திருத்தல் வியக்கத்தக்கது. முதுகி லடி பட்டு ஓடுதல் சுத்த வீரத்தன்மை வாய்ந்தவர்க்கு அழகல்ல. நம் மீசரோ, விரலுகிர்விழி சிரிப்பினால் மருவலர்க் கடந்தருள் மதுகை வாய்ந்தவர். நம் மதுரைநாதர் பொறுத்திருத்தல் என்னேவென்றால், ‡ "செந்தமிழ்க் கன்புமிக்கார்" என்ற ஆன்றோர் வாக்கியத்துக் கிலக்காயிருத்தல்தான். செந்தமிழிடத் தன்பு பூண்டவராதல் கீழ்க்காணும் ஐந்து ஏதுக்களான் நன்கு விளங்கும்.

1. கடவுள் மண்சுமந்த திருவிளையடல் செய்தருளிய நாடு தமிழ் நாடு. % "தென்சொல் மடமகட் காங்கென்பது வழுதி நாடன்றே?"

2. இத் திருவிளையாடல் செய்தருளிய நகர், அந் நாட்டுத் தலை நகராயதும் முத்தமிழ்ச் சங்கங்க ளிருந்ததுமாய மதுரையே. ¶ "சிறை வான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளு — முறைவானுயர் மதிற் கூடலினய்ந்த வொண்டீந் தமிழின் றுறை" $ "வரைச்சந் தரிக்கு மணவாளர் கூடல் வளர்ந்திடு மூவுரைச் சங்கர்."

3. அந்நகருள்ளுந் தாம் நின்றுகொண்டு விளையாடிய தானமோ, செந்தமிழியற்றேரும் வைகைமா நதியின் கரையே. V "அனலும் புனலு மியலறியும்." ✻ "யாரறிவார் தமிழ்ப் பெருமை யென்கின் றேனென் னறிவீன மன்றேவுன் மதுரை மூதூர், நீரறியும் நெருப் பறியும்." § "நீரு நெருப்பு நிரம்பு தமிழ்ப் பெருமை யோரும் படியருள் கொளொண்மழவும்."

4. தாம் இக்கோலங்கொண்டது ஓர் அன்பர் வாய்மலர்ந்த தமிழ்த் தொடை சூடவேண்டியன்றே. † "பாடும் பணிநீ கூடும் பொருட்டு,

---

‡ திருவாதவூரடிகள் புராணம். % திருவிளையாடற் புராணம். ¶ திருக்கோவையார் 20. $ மறைசையந்தாதி. V திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம். ✻ மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி. § திருவிடைமருதூருலா. † நால்வர் நான்மணிமாலை.

மதுரைமா நகரிற் குதிரை மாறியும், விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழின் மேனியின் மாற்றடிபட்டும்.''

5. 'தம்மைப் பிரம்பாலடித்தவன் செந்தமிழ் நாட்டுக் கரசனும், தமிழ் வளர்ப்பதைத் தமக்கு அணிகலனுகக்கொண்ட பாண்டியர் குலத்திற் ரேன்றின வள்ளலும், தமிழினிடத் தன்புபூண்டவனு மல்லவா!

‡ "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து.''

(வரும்.)

ப. தி. சோ. குமாரசாமி.

இலக்கியப் பகுதி.

சீவக சிந்தாமணி.

௪. குணமாலையா ரிலம்பகம்.

(வெண்டாமரை ௩, இதழ் ௧௦, 231-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்னர் நீர் விளையாட்டு நிகழ்ந்தது. அவ் விளையாட்டின் வினேதங் காணச் சீவகன் முதலியோர் சென்றனர்.

57. கோல நெடுங்கண் மகளிர் கூந்தல் பரப்பி யிருப்பப்
பீலி மஞ்ஞை நோக்கிப் பேடை மயிலென் றெண்ணி
யாலிச் சென்று புல்லி யன்மை கண்டு நாணிச்
சோலை நோக்கி நடக்குந் தோகை வண்ணங் காண்மின்.

---

‡ வில்லி பாரதம்

57. அழகிய நெடிய கண்களையுடைய மகளிர் தோகை மயிலின் ஆடலைக் கண்டு தங் கூந்தலை உலரும்படி பரப்பியிருக்க, அதன் பெடை அவரைத் தன் தோகை மயிலென்று கருதிச் சென்று புல்லி அல்லாமை கண்டு நாணங்கொண்டு சோலையை நோக்கி நடவாநிற்கும்; இங்ஙனம் மயங்கும்படியிருந்த தோகைபோல்வாள் வடிவைக் காணுங்கள்.

இது புல்ல விருத்தவிற் ரேகையென்றார். இனி நாணவெனத் திரித்து, மகளிர் கூந்தலைப் பரப்பியிருப்ப, பேடைமயில் அவர்களை நோக்கித் தன் பீலி மஞ்ஞையென் றெண்ணிப் புல்லி அல்லாமைதனைக்

"மகளிர் வைத்த மரகத மணிகள் கையா லொடிக்கலாம்படி பச்சைப் பசுஞ்சுடரை வீசுதலினாலே, மான்பிணை யொன்று அதனை அறுகம்புல்லென்று கருதிச் சென்று கறித்தற்குத் தான் கழுத்தை வளைத்து நாவினாலே வளைக்க, அதனைத் தோடிக்கட் பூவை நோக்கி நதுமா றெளிதோ காண்மின்" என்று காணப்போயினார் வியந்து கூறும் படி நீர்விழா நிகழ்கின்ற காலத்தே, அப்புற நகர்ச்சோலையிலே அந்தணர்க் காக்கிய சோற்றுக் குவியலை ஒரு நாய் வந்து கௌவிற்று. அதனைக் கண்ட அந்தணர், ஒரு பிறப்பில் ஒருவர் உண்டியை விலக்கினவர் மறு பிறப்பில் விலக்குண்டவர்க்கு அடிமையாய்ப் பிறப்பர் என்னும் உண்மையை யறியாதவராதலின், கல்லுந் தடியுங் கொண்டு அந் நாயைக் கொல்லத் தொடங்கினர். நாய் நடுக்குற்று ஒரு குளத்திலே வீழ்ந்து வருந்துஞ் சமயத்தில், அதனைச் சீவகன் கண்டு மனமிரங்கி, "பஞ்ச நமஸ்காரம்" என்னு மந்திரத்தை அதன் செவியில் வழுத்தினான். அவ்வுபதேசத்தால் உடனே நாய் தன்னுடம்பை விட்டுத் தேவனாகி யாவரும் வியக்க விண்ணிற் சென்றது.

பின்னர் அத் தேவன் சுதஞ்சணன் என்னும் பெயரை யுடையவனாய்த் திரும்பிவந்து சீவகன் முன் வணங்கி நிற்க, சீவகன் "நீ யார்" என்றனன். சுதஞ்சணன், "துங்துமக் துவட்டின் வீங்கிக் கோலம் வீற்றிருந்த தோளாய்! இங்கிருந்தீ நின்னருளாற் சென்று இயக்கர் தலைவனாய்ச் சங்கவெண் மலையில் சந்திரோதயமென்னு நகரில் இருப்பேனாயினேன், என் பெயர் சுதஞ்சணன், நினக்குப் பணிசெய்யுங் கருத்துடையேன்" என்று கூறுதலும், சீவகன் மகிழ்ச்சியுற்று, "எனக்குப் பகைவரால் துன்பம் நேருங்காலத்து வந்து உதவிசெய்க, இப்போது நின்னகர் சென்றுறைக" என்றனன். சுதஞ்சணன் சீவகனைப் புல்லிக்கொண்டு, "யான் நினது நிழல்போல் நின்னை நீங்கேன், நினக்கு ஓரிடர் வந்ததாகில் என்னை நினைப்பாயாக" என்று சொல்லி, மின்னேழுஉப் பறப்பதோத்து விசும்பிவர்ந் தமரன் சென்றான்.

58 சொல்லிய நன்மை யில்லாச் சுணங்கனிவ் வுடம்பு நீங்கி
யெல்லொளித் தேவ னாகிப் பிறக்குமோ வென்ன வேண்டா

கண்டு நாண, அது கண்டு தன் பெடை தன்னை யறிந்து புணரும்படி சோலையை நோக்கிப் போகின்ற தோகையின் வண்ணத்தைக் காண்மினென்றுமாம்.

58. சொல்லப்பட்ட தான முதலிய நன்மைகள் இம்மையிற் செய்யாத சுணங்கன் இவ்வுடம்பை நீங்கி இதற்கு முன்னர் நல்வினை வந்துதவி

கொல்லுலை யகத்திட் டேதிக் கூரிரும் பிரதங் குத்த
வெல்லையில் செம்பொ னாகி யெரிநிறம் பெற்ற தன்றே.

என்று சீவ்கன் தன் தோழரை நோக்கிச் சொல்லினன்.

புனல் விளையாட்டு முடிந்ததும், ஆடவரும் மகளிரும் தேரிலும் செம்பொற் சிவிகையிலும் ஏறிக்கொண்டு, மலையினின்று வீழ்கின்ற வெள்ளம் கடற்குப் போனாற்போலே, நகரிக்குச் செல்லுகையில், அசனி வேகம் என்னும் பட்டத்து யானை செருக்குற்றுச் சங்கிலி பிணித்த கட்டுத் தறியை முறித்துப் பாகனுக் கடங்காமல், குணமாலைக் கெதிரே யோடிச் சினந்து நின்று அவளைக் கொல்லத் தொடங்கியது. அதனைக் கண்ணுற்ற சீவகன், குடவரை நெற்றி பாய்ந்த கோளரி போன்று, அவ் யானையின்மேற் பாய்ந்து அதன் செருக்கடக்கி அதனை யப்பாற் றுரத்திக் குணமாலையைக் காப்பாற்றினன். காத்தவன் குணமாலையின் அழகில் வீடுபட்டு அவள்மேற் காதல்கொண்டு சென்றனன்.

முன்னரே சீவகன் மாட்டு விருப்புற்றிருந்த குணமாலை அவனை நேரிற் கண்டமையால் அவனிடத்தே அதிக மோகமுடையவளாய்த் தன் மனையை யடைந்து, தோழி முதலியோர் நிரம்ப உபசரிக்கவும் உணவு முதலியன விரும்பாளாய்க் கன்னிமாடத்தே தனியே யிருந்து வருந்தினவள், அருகிலிருந்த தன் கிளியைத் தூதாக விடுத்து அதனால், சீவகன் தன்மேற் காதல்கொண்டிருப்பதையும், தன்னை மணஞ்செய்து கொள்ள விரும்பி நிற்பதையும் தெரிந்துகொண்டு ஒருவாறு தேறுத லடைந்தனள்.

பின்பு, குணமாலைக்குற்ற வருத்தத்தையும் சீவகன் மாட்டு அவள் கொண்ட கருத்தையும் அவள் தாயாகிய விநயமாலை அறிந்து, அதனைத் தன் கணவனாகிய குபேர மித்திரனுக்குத் தெரிவித்தனள். குபேரமித் திரனும் சீவகனுக்குத் தன் மகளைக் கொடுத்தலில் மகிழ்ச்சி மிக்குடைய வனாய், சீவகன் தந்தையாகிய கந்துக்கடனிடத்துச் சில முதியோரைத் தூது விடுத்தான். அம் முதியோர் அவனிடம் சென்று, யாம் மகளைத்

ஒருவ னுபதேசித்த மந்திரத்தால் மிக்க வொளியையுடைய தேவனாகிப் பிறக்குமோவென்று உலகத்தார் கருதவேண்டா; இரும்பை உலையிலே யிட்டேதி உருகின முகத்து இரதத்தைக் குத்த, அது மாற்றற்ற பொன் னாய் விளங்கு நிறத்தைப் பெற்றதல்லவோ, இதுவும் அத்தன்மைத் தென்று கருதுக வென்றான்.

கூர்ப்பு – மிகுதி; என்றது பொன்னாதற்கு வேண்டுஞ் செய்கை களை முன்னேயுடைய இரும்பென் றவாறு.

தருவேம், நீர் மகளைக் கொண்மின் என்று கூறி, "யாவரும் தம் மகளைக் கொடுக்க நேராராயினும், இன்று புதிதாகச் சீவகனுக்கு யாம் மகட்கொடை நேர்ந்தேம்" என்று உமக்குக் குபேரமித்திரர் கூறினாரென்றனர். அது கேட்டுக் கந்துகன் பெருமகிழ்ச்சியுற்று அதற்கு உடம்பட்டபின், திருமணத்துக்குரிய பொருள்களனைத்தும் திரட்டப்பட்டன. அதன் பின்பு சீவகன் குணமாலையை மணம்புரிந்து இன்பக் கடலி விறங்கினன்.

59. பண்ணார் கிளவிப் பவளம் புரைசெவ்வாய்க்
கண்ணார் கதிர்மென் முலைக்காம் படுமென்றோள்
விண்ணோ ருலகின் னொடுமிந் நிலத்தில்லாப்
பெண்ணா ரமிர்தே யவன்பெற் றவமிர்தே.

60 முந்நீர்ப் பவளத் துறைநித் திலமுத்த
மந்நீ ரமிர்தீந் துகொடுப் பவமர்ந்தான்
மைந்நீர் நெடுங்கண் புருவங் கண்மலங்கப்
பொன்னா ரரிக்கிண் கிணிபூ சலிடவே.

(வரும்.)

பத்திராதிபர்.

இலக்கணப் பகுதி.

ஆயிரமென்பதன் குறிப்பு.

ஆயிரமென்னும் எண்ணைப்பற்றிச் செந்தமிழ்ப் பத்திரிகை தொகுதி ௪, பகுதி ௯-ல், ஸ்ரீமத் து. அ. கோபிநாதராவு அவர்கள் எழுதியுள்ளதைக் கண்ணுற்றனன்.

---

59. அவன் பெற்ற வமிர்து, தேவ ருலகத்தினும் இந்நில வுலகத்தினு மில்லாததொரு பண்போன்ற சொல்லையும் பவளம்போன்ற செவ்வாயையும் கண் பொருந்தி ஒளிர்கின்ற மெல்லிய முலைகளையும் மூங்கிலை வென்ற தோள்களையும் உடைய பெண்தன்மையார்ந்த அமிர்தே யென்க.

60. கடலிற் பிறந்த பவளத்தே யுறைகின்ற முத்துக்கள்போலும் பற்கள், அக்கடலிற் பிறந்த அமிர்தத்தைத் தாமீன்று கொடுப்ப, கண்கள் புருவங்கள் இவை பிறழ, கிண்கிணி யொலிப்பப் புணர்ச்சியைப் பொருந்தினான்.

சகசரம் (ஸஹஸ்ரம்) என்னும் வடமொழி சாச்சிரம், சாசிரம், சாயிரம், யாயிரம் என வழிவழித் திரிந்தபின், ஒற்றினீக்கமென்னும் இலக்கண முறைமையான் யாயிரமென்பது ஆயிரமென்றாகும்.

யாயிரம் யகரவொற்று நீங்கியது.

ஏகம், தசம், சதம் என்பன வடமொழியாம்; ஒன்று, பத்து, நூறு என்பன தென்மொழியாம். இவற்றுள் ஏகம், தசம், சதம் என்பவற்றினின்று முறையே ஒன்று, பத்து, நூறு ஏன்பன திரிந்து வருமாயின் சகசரமென்பதில் ஆயிரமென்பது திரிந்துவந்தது உண்மையெனத் துணிதல் கூடும்.

ஏகம், தசம், சதம், சகசரம் என்பவற்றுக்கும் ஒன்று, பத்து, நூறு ஆயிரம் என்பவற்றுக்கும் வேறு வேறு முதற்சொற்களுள்ளன என்பது எனது துணிபு.

தமிழிலும் ஆரியத்திலும் உள்ள எண்ணுப் பெயர்கள் காரணம் பற்றி வந்தனவேயாகும். ஏகம், தசம், சதம், சகசாம் என்பனவற்றுக்கு ஆரியநூல்வல்லார் என்ன காரணம் கூறுகின்றனரோ அறிகின்றிலேன். அறியவும் விரும்புகின்றனன்.

ஆறு, ஆடு, ஆமை, ஆனை, ஆளிமுதலியன முறையே யாறு, யாடு, யாமை, யானை, யாளி என்பனவாகத் திரிதல்போல ஆயிரமென்பது யாயிரமென்றாய் அது சாயிரம், சாசிரம், சாச்சிரம் என வழிவழித் திரிதலும் கூடும்.

யசரம் சகரமாகும்

சகசரம் என்பதில் ஆயிரமென்பது வந்ததுண்மையாயின்

"சிதைந்தனவரினு மியைந்தனவரையார்" என்பதினுள்ளே அடங்கிவிடும்.

"ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது" என்பது முதலாகக்கிளந்து கூறல் வேண்டா.

திருமாகறல், கார்த்திகேய முதலியார்.

சாத்திரப் பகுதி.

சிவ விஷ்ணு அபேதம்.

திங்கள் மௌலியஞ் செஞ்சடைப்பிரானும், மங்கையை மார்பில் வைத்த மாயவனும் உலகு புகழும் பெருங் கடவுளாவர். அவ்வம்மதத்

264

தினரும் தத்தம் மதத்திற்குரியதே உயர்வென உரைப்பர். இதனல் மதத்வேஷமுற்றிக் கடவுள்மீதும் வைரங்காட்டா நிற்பர். சிவனென்னும் பேரே கேளாதொழித்த சில வைணவர் சிவபிரான் வீதி உலாவருதல் கண்டு கண்ணினற் காணுவண்ணம் கண்களைத் துணிகொண்டு கட்டிக் காதிற் கரங்கொண்டு இறுகமூடி, வாயால் பல்வேறு தூடண வார்த்தை சொல்லி அச் சிவபிரானை யர்ச்சிப்பர். விண்டு, வீதிவலம் வருதல் கண்ட போலிச் சைவரிற் சிலர், தங்கண்களை மூடிச் செல்லாவிடினும் விரோத மனத்தராய் வீண்மொழி தூற்றுவர். கல்வியிற்றேர்ந்த சில சைவ சிகா மணிகள் மதபேதமின்றியும் கடவுள் பேதமின்றியும் பிரசங்க மழை பொழிந்து மக்கள் வல்வினையை வாட்டிவருங்கால், இடை இடையே "அரஹர மஹாதேவ, கோவிந்தா கோவிந்தா" என்று சமரச ஞானத் தாற் சாற்ற, சாத்திர மறியாச் சைவரிற் சிலர், நடுநிலைவாய்ந்த உண்மை ஞானிமீதும் அருவருப்புக்கொண்டு அகம்புழுங்குவர். "சமயகோடிக ளெலாந் தந்தெய்வ மெந்தெய்வமென்று எங்குந் தொடர்ந்தெதிர் வழக் கிடவு நின்றதெது" என்று தாயுமானர் கூறியபடி, உந்தெய்வம் சிறிது எந்தெய்வம் பெரிது என இருதிறத்தாரும் வாய்வன்மை செலுத்தியு மாற்ருது கைவன்மையுங் காட்டா நிற்பர். அம்மம்ம! தெய்வம் யாது செய்யும்? நான் பெரியன்! நான் பெரியனென முன் வந்து நவிலுமா?

நுண்ணறிவிலார்க்கு இத்தகைய சண்டைக் கிடந்தந்தது யாதென நோக்குழி, சான்றேர் கூறிய பாசுரத்துள்ள சில சொற்களாம். அவற் றுட் சில வருமாறு.

"பெண்ணுலாஞ் சடையினனும் பிரமனு முன்னைக்காண்பான்
எண்ணிலா வூழிவூழித் தவஞ்செய்தார் வெள்கிநிற்ப."

(தொண்டரடிப் பொடியாழ்வார்.)

"நான்முகனை நாரா யணன்படைத்தா னான்முகனுந்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்."

(திருமழிசை யாழ்வார்.)

"காரொளிய திருமேனிச் செங்கண்மாலுங் கடிக்கமலத் திருந் தயனுங் காணுவண்ணம், சீரொளிய தழற்பிழம்பாய் நின்றதொல்லைத் திகழொளியை...."

(அப்பர் சுவாமிகள்.)

"வெறியார்தரு கமலத்தயன் மாலுந்தனை நாடி
யறியாவகை நின்ருனிட மாலந்துறை யதுவே."

(சம்பந்த சுவாமிகள்.)

“குருதி சோர வானை யின்றோற் கொண்ட சடையன்
மருது கீறி யூடு போன மாலயனு மறியாச்....”

(சுந்தரமூர்த்தி சுவாமிகள்.)

இங்ஙனம் இருமதக் குரவரு மியம்பிய வாற்றான் அவர் கருத் தறியாமல் நம் சமயப் புலிகள் சண்டையிடச் சாலச் சந்தோடம் கொண் டனர். தெய்வ தூஷணையையே தொழிலாகக் கொண்டனர். பாவ மூட்டையைக் கட்டலாயினர். அந்தோ! இவர்கள் அறிவிருந்தவா றென்னே! பரிதாபம்! பரிதாபம்!!

பேதங் கழன்ற பெரியோர்கள், உலகத்தை யீடேற்றவந்த உயர் ஞானிகள் பேதத்தைக் கற்பிப்பார்களா? ஒருபோதும் கற்பிக்கமாட் டார்கள். அவர்கள் அங்ஙனம் கூறியதற்குக் காரணம், காரணப் பிரம்மம் உபாசிக்கத்தக்கது. காரியப் பிரம்மம் உபாசிக்கத்தக்கதல்லவென்பதே. அதனாற்றான் சில நாமத்தால் காரணப் பிரம்மத்தையும் சில நாமத்தால் காரியப் பிரம்மத்தையும் பேசியிருக்கின்றனர். இதைப்பற்றி இன்னொரு சமயம் விரித்துக் கூறுவோம். பல நாமங்களால் வியவகரிக்கப்படும் தெய்வம் ஒன்றேயென்பதும் அதிற் சிறிதும் பேதமில்லையென்பதும் அடியிற் காணப்படும் அவர்கள் வாக்கியங்களாலேயே நன்கு விளங்கும்:

“அங்கமலத் தயனொடுமா லாகிமற்று மதற்கப்பா லொன்றாகி யறியவொண்ணாச், செங்கனகத் தனிக்குன்றை....”

(அப்பர்.)

“சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகிச் செழுஞ்சுடராய்த் தீயாகி நீருமாகிப், புவனாகிப் புவனங்க ளனைத்துமாகிப் பொன்னாகி மணியாகி முத்துமாகிப், பவனாகிப் பவனங்க ளனைத்துமாகிப் பசுவேறித் திரிவானோர் பவனாய்நின்ற, தவனாய தலையாலங் காடன்றன்னைச் சாராதே சாலநாள் போக்கினேனே.”

(அப்பர்.)

“மூவராயு மிருவராயு முதல்வ னவனேயாங்
தேவர்கோயி லெதிர்கொள் பாடியென்ப தடைவோமே.”

(சுந்தரர்.)

“ஓதியாருமறிவாரில்லையோதியுலகெலாஞ்
சோதியாய்நிறைந்தான்சுடர்ச்சோதியுட்சோதியான்
வேதியாகிவிண்ணாகிமண்ணோடெரிகாற்றுமா
யாதியாகிநின்றானுமையாறுடையையனே.”

(சம்பந்தர்.)

"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்...."
(சிவஞான சித்தியார்.)

"யானுந் தானா யொழிந்தானை யாது மெவர்க்கு முன்னோனைத்
தானுஞ் சிவனும் பிரமனு மாகிப் பணித்த தனிமுதலை...."
(நம்மாழ்வார்.)

"யாவையு மெவருந் தானா யவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந்துக்குஞ் சொலப்படா அ வுணர்வின்மூர்த்தி
யாவிசே ருயிரி னுள்ளான் யாதுமோர் பற்றில் லாத
பாவனை யதனைக் கூட்டி லவனையுங் கூட லாமே."
(நம்மாழ்வார்.)

"முனியே நான்முகனே முக்கண்ணப்பா வென்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே யென்கள்வா
தனியே னாருயிரேயென் றலைமிசையாய் வந்திட்டு
இனிநான் போகவொட்டே னென்றும்மாயஞ் செயேலெனையே."
(நம்மாழ்வார்.)

"சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனா யயனாய்க்
கூராழி வெண்சங் கேந்தி"
(நம்மாழ்வார்.)

"வாலகில்லியர் பிரஜாபதியை நோக்கி, அக்கினி, வாயு, சூரியன், பிராணன், காலம், அன்னம், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் இவர்களில் ஒருவரைச் சிலர் தியானஞ் செய்கின்றனர். இவரிற் சிறந்தார் யாவர்? நீவிர் யாரைப் பெரியாரென்பீரோ அவரே எமக்கும் பெரியாரென, பிரஜாபதி, சிறந்ததாயும் அழிவில்லாததாயும் சரீரமின்றியதாயுமுள்ள பிரம்ம வஸ்துவுக்கே நீங்கள் கூறிய தேவர் உருவங்களாவர். எந்த மனிதனுக் கெதிலெதிற் பிரியமோ அதனைக்கொண்டு திருப்தியடையலாம். எல்லாம் பிரம்மம்தான். எல்லாம் பிரம்ம சரீரங்களே. ... பிரபஞ்ச லயமாகுங்கால், ஆத்மாவில் ஒன்றாகிவிடுகிறான்."
(மைத்ராயண்ய உபநிஷத்.)

"ஜகத் அதீச்வரனாகிய ஜனார்த்தனனாலுஞ்சரி, சகத் முடிவையுண்டாக்கும் மஹேச்வரனாலுஞ்சரி, இவர்களுள் வஸ்து பேதமென்பது எனக் கில்லவேயில்லை...."
(அப்பைய தீக்ஷிதர்.)

இவ் வாக்கியங்கள் சிவ விஷ்ணு அபேதத்தை எவ்வளவு நன்றாக விளக்கிக் காட்டுகின்றது பாருங்கள். "தெய்ம மிகழேல்" என்னும்

267

ஔவைப் பிராட்டியார் அமுத வாக்கையு மறந்து, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல, பிரம்மாநந்தத்தை யடையப்போய், தெய்வதூஷணம் செய்து நிரகில் மூழ்குவது மக்கட்கு அறிவுடைமை யாமோ? தெய்வதூஷணம் பண்ணுபவர்கள் நரகடைவது நிச்சயம்.

"மத்பக்தா சங்கரத்வேஷீ மத்வேஷீ சங்கரப்பிரிய:
தாஉபௌ நரகௌயாந்தி யாவஸ்சந்த்ர திவாகர:"

(ஸ்ரீ மகாபாரதம்.)

"ஏதமுற நாரணனை யென்னிலயல் காணும்
பேதவிழி யாளர்பிற விப்பிணி யருரே
மாதவனை யானென மனத்தினினை கிற்கும்
போதவிழி யாளர்பரி பூரணம டைந்தார்."

(ஈசுரகீதை, யோக அத்யாயம்.)

"தில்லைநாயகனவன் திருவரங்கனுமவன்
எல்லையானபுவனமும் ஏகமூர்த்தியானவன்
பல்லுநாவுமுள்ளபேர் பகுந்துகூறிமகிழுவர்
வல்லபங்கள்பேசுவர் வாய்புழுத்துமாய்வரே."

(சிவவாக்கியர்.)

"அரனதிக னுலகளந்த வரியதிக னென்றுரைக்கும்
அறிவிலார்க்கு...."

(கம்பராமாயணம் கிட்கிந்தாகாண்டம்.)

"உருத்திரபிராற்கு அரியையயனை யொப்பதிக மென்றுரைப்போர்
பாற்றரிதாய கொடுநிரயத்துப் பற்பலநாள் மூழ்குவருண்மை."

(சூதசங்கிதை.)

"..
பலதெய்வம் பழித்துரைக்கும் பாதகரும் பரந்ததங்கள்
வாய்வழியே புழுச்சொரிய மாநரகக் கும்பியிடை
மறுக்கக் கண்டான்."

(ஒட்டக்கூத்தர் இராமாயணம்.)

என நூல்கள் அறிவுபுகட்டிக் கடுஞ் சாபமும் தந்துள்ளன. ஆகலின் அன்பினீர்! நாம் தெய்வதூடணத்தை மனத்தின்கண்ணே நாடாது ஓட்டி, சச்சிதாநந்தத் தனிக் கடவுளிடத்தே சாசுவதப் பேரன்பை நாட்டி, முடிவில் நித்யாநந்த வாழ்வை யடைவோமென்பதை ஒழுக்கத்திற் காட்டி மேனிலை யடைவோமாக.

செந்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர ஐயர்.

268

சுவிவேக தர்ப்பணம்.

(ஸ்ரீ சாந்தாநந்த சரசுவதி சுவாமிகள்
ஆந்திர மொழியில் அருளியது.)

(வெண்டாமரை ௩, இதழ் ௭, 159-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேலும், பாவ புண்ணியங்களென்னும் கயிறுகளாற் கட்டப்பட்ட அங்கவீனனைப்போலவும் சிறையி லடைக்கப்பட்ட கள்வனைப்போலவும் சுதந்தரமற்றதாய், எமதண்டனைக் குட்பட்டு நிற்பவனைப்போல மிகுந்த பீதியுற்றதாய், லகரி பதார்த்தத்தை உட்கொண்டவன் சொக்கியிருப்பது போல விஷய போகங்களென்னும் லகரி தலைக்கேறிச் சொக்கியிருப்ப தாய், பெரிய சர்ப்பத்தால் கடிக்கப்பட்டவனைப்போல விஷயமென்னும் பாம்பால் கடிக்கப்பட்டதாய், மகாந்தகாரத்தைப்போல ஆசையென்னும் இருட்டினால் அந்தத்துவமடைந்ததாய், இந்திர ஜாலத்தைப்போல மாயா சொரூபமாய், சொப்பனத்தைப்போல அயதார்த்த சொரூபமாய், வாழைக் குருத்துப்போலச் சாரமில்லாததாய், வேஷக்காரனைப்போல அநேக வேஷங்களைத் தரித்ததாய், சுவரின்மீ தெழுதப்பட்டுள்ள சித்திரம்போல அயதார்த்த மனோரம்மியமாய் இருக்கும் இந்த ஜீவனுக்கு, சுவகர்மத்தினால் நானாவித சுகதுக்கபோகங்கள் சம்பவிக்கின்றன. இதனால் ஜீவன் அநேக அநர்த்தங்கட்கு விஷயமாவன். இத்தகைய அநர்த்தங்கட்கெல்லாம் முக்கிய காரணம் அஞ்ஞானமேயன்றி வேறன்று. இந்த அஞ்ஞானம், சுகரஹஸ்யோபநிஷத் வாக்கியத்தின்படி, குருமுகமாகச் செய்யும் சிரவண மனன நிதித்தியாசங்களால் நீங்கிப் பூர்ண ஞானோதயமாகும்.

"உலக விலக்ஷணமான பிரம்ம வித்தையை உபதேசிக்கும் மகா புருஷனாகிய பிரம்ம ஞானியினிடத்து மிக்க வணக்கத்தோடு பக்தி செய்து பிரம்ம வித்தையைக் கிரகித்துக் கடைத்தேறும் வழியைக் கைப்பற்றவேண்டும்" என்று த்ரிபாத்விபூதிமஹாநாராயணோபநிஷத்தும் பகவத்கீதையும் பகருகின்றன.

"பிரம்ம ஞானியாகிய அந்தக் குருவானவர் அகக்கரணமும் புறக் கரணமும் அடங்கப்பெற்று, தம் சமீபத்திற்கு வந்திருப்பவர் எந்த ஞானத்தினாலே சத்திய சொரூபமான நாசரகிதமான பிரம்மத்தை யறிந்து கொள்வார்களோ அந்தப் பிரம்ம வித்தையை உண்மையாக உரைத்தல் வேண்டும்" என்று முண்டகோபநிஷத் முழங்குகின்றது.

(வரும்.)

பத்திராதிபர்.

269

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பருய், ஆயுர்வேத

ஔ ஷ த சா லை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

39. விஷ்ணுதிலா:— எப்பேர்ப்பட்ட தலைவலிக்கும் நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் இம் மருந்து கொஞ்சம் தடவி நன்ருகத் தேய்க்கவேண்டும். இடுப்புநோய், கழுத்துநோய், பக்க சூலை, கைகால் பிடிப்பு முதலியனவும் இன்னும் தேகத்தில் காணும் மற்றுமுள்ள சகல வலிகளுக்கும் இம் மருந்தில் கொஞ்சமெடுத்து நோயுள்ள இடத்தில் நன்ருகத் தேய்க்கச் சுகமாகும். தேள், நண்டுவாக்களி, பூரான் இதுகள் கொட்டின அல்லது கடித்தவிடத்தில் இம் மருந்தைத் தடவி நன்ருகத் தேய்த்தால் சௌக்கியமாகும். சீசா 1-க்கு அணு 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

40. சுகுமாரதிலா: — இதை பிரதிதினமும் ஆண்குறியின்மேல் பூசிவந்தால் லிங்கத்தின் சோர்வு, ஆண்குறி துவளல், கோணல், நாம்புகளின் தளர்ச்சி நீங்கி, நீண்டு, கெட்டிப்பட்டு மிகுந்த வலிவுகொள்ளும். இழந்துபோன போகசக்தி முற்றிலும் பெற்று சுகிக்கலாம். விலை சீசா 1-க்கு ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

41. நாக்குப்பூச்சி மருந்து: — குடலிலுள்ள எல்லாவித கிருமிகளையும் வெளியாக்கி, நாக்குப்பூச்சிகளால் உண்டாகும் எல்லாவித பாதைகளையும் நிவாரணஞ்செய்யும். தேக ஆரோக்

4.

கியத்தைத் தரும். நாக்குப்பூச்சிகள் குடலிலிருந்தால், அடிவயிற்றில் கனம், பசியின்மை, அபரிமிதமான பசியைப்போல் தோற்றல், சாப்பிட்டபின் வயிற்றுநோய், வயிற்றுப்போக்கு, வாய் நாற்றம், வாந்தி, வெகுட்டல், சுரம், தலைவலி, மூக்கிலும் ஆசனத்திலும் அரிப்பு, வாயில் உமிழ்நீர் ஊறல், நாக்கு இழுத்துக்கொள்ளல், சில சமயம் மலச்சிக்கல், சில சமயம் மலக்கழிச்சல் முதலிய பற்பல நோய்கள் நாக்குப்பூச்சிகளால் உண்டாவதை இம் மருந்து முற்றிலும் குணமாக்கும். விலை சீசா 1-க்கு அணா 10. 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

42. ஓம வாட்டர்: — இது சாதாரணமாய் கடைகளில் பெரிய சீசாக்களில் விற்கும் ஓம வாட்டரல்ல. எம்மால் தயார் செய்த ஷை ஓம வாட்டர் ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படுகிறது. இதைத் துளிகள் கணக்காகவே உபயோகித்தால் போதுமானது. இச் சிறு சீசாவிலுள்ளதை 24 அவுன்சு சுத்த ஜலத்துடன் கலந்துகொண்டால், கடைகளில் விற்கும் ஓம வாட்டரை விட சிறந்த ஓம வாட்டரைத் தரும். வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, அக்கினிமாந்தம், அஜீர்ணபேதி இவைகளுக்குக் கொடுத்தால் சௌக்கியமாகும். ஜீர்ண சக்தியை அதிகரிக்கும். காலரு என்னும் வாந்திபேதி ரோகத்திற்கு இதைக் கொடுத்து தகுந்த குணத்தைக் கண்டதுண்டு. விலை சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.

N. B.— என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பறங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.